1973 பிப்ரவரி 6]

நீண்டகாலமாகவே இங்கே சட்டமன்றத்திலே, பல சட்ட மன்ற உறுப்பினர்கள் விரைவாக அந்த கம்பெனிகளை எடுத்துக்கொள்ள வேண்டும், அரசு இலாகாவின் மூலமாக, மின்சாரம் வழங்கவேண்டு மென்று கூறியும், ஏன் அதிகமான காலதாமதத்தை அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருக்கிறது ? கூடிய விரைவிலே எல்லா கம்பெனிகளையும் எடுக்கக்கூடிய முறையில் ஒரு காலகட்டத்தை நம்முடைய அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அந்த காலகட்டம்தான் இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக என்று சொல்லி யிருக்கிறேன்.

Hit and Run accidents

* 38 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the 'Hit and Run' accidents have been on the increase in Madras City in 1971;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken to prevent such accidents?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் 1—1—1971 நாளிலிருந்து 31—12—1971 வரையில் " மோதி விட்டு ஓடிவிடும் " வண்டிகளினால் மொத்தம் 623 விபத்துக்கள் ஏற்பட்டன. கடந்த ஆண்டில் இதே கால அளவில் 31—12—1970 வரையில் 453 விபத்துக்களே ஏற்பட்டன.

(உ) " மோதிவிட்டு ஓடிவிடும் " வண்டிகளால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க, குறிப்பாக நெருக்கடி நேரங்களில் முறையான சுற்றுக்காவல் பணிபுரிகின்றனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, "மோதிவிட்டு ஓடிவிடும் வண்டிகள்" சாதாரண கார்களா ? அல்லது அரசாங்க பஸ்களா ? அப்படி ஓடிவிட்டால் அவர்களை பிடிப்பதே கிடையாதா? அவர்களுடைய நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மோதிவிட்டு யார் ஓடினாலும் அவர்களைப் பிடிப்பதற்கு எப்பொழுதும் அரசாங்கம்

தயங்குவது இல்லை, அது வண்டிகளாக இருந்தாலும் சரி, அரசாங்க பஸ்களாக இருந்தாலும் சரி. அந்த வகையிலே பார்க்கும்போது 623 கேஸ்களில், 105 கண்டு பிடிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, மோதி விட்டு ஓடுகின்ற வண்டிகளை எளிதில் கண்டு பிடிப்பதற்கு முடியாமலிருக்கிற காரணம் அந்த வண்டிகளிலே பொருத்தப்பட்டிருக்கிற நெம்பர் பிளேட்டுகள் எல்லா வண்டிகளிலும் ஒரே மாதிரியாக, ஒழுங்காக எழுதப்படவில்லை. சில வண்டிகளில், சில மாதிரியாக சின்னதாக எழுதியிருக்கிறார்கள். சில வண்டிகளிலே புரியாத அளவிலே எழுதி யிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மாற்றி, எல்லா வண்டிகளிலும் ஒரே மாதிரியாக எழுத வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனை. ஆனால், வண்டிகளைப் பொறுத்தும் நெம்பர் சைஸ்களை மாற்ற வேண்டியிருக்கிறது. கார்களும் இருக் கின்றன, பெரிய வண்டிகளும் இருக்கின்றன. ஆகவே, அவைகளை எவ்வாறு முறைப்படுத்தலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

விரைவுப் பேருந்துகளுக்கு புதுநிறத் திட்டம்

* 39 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு இப்போது இருக்கும் சிகப்பு நிறத்தை மாற்றி வேறு நிறத்தில் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்டு (இ) : 1972-லிருந்து விரைவுப் பேருந்துகளைக் கட்டுவதில் செய்யப்பட விருக்கிற மாற்றத்திற்கிணங்க, விரைவுப் பேருந்துகளை அனைத்தின் நிறத்தையும் சிவப்பு—வெளிர் மஞ்சள் நிறத்திலிருந்து பச்சை—வெளிர் மஞ்சள் நிறத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. பழைய விரைவுப் பேருந்துகளுக்கும் படிப்படியாக புது நிறத்திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்படும்.